**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 15.04.2026**

**OS. No. 06/2015**

**வழக்கு சாட்சி DW.1– சுசிலா, க/பெ. ஜெயராஜ்**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனது நிரூபண வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்.1566/33, பட்டா எண்.517 என்ற வீடு எனக்குப் பாத்தியப்பட்டதல்ல என்றாலும், அது மகேந்திரனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது மேற்சொன்ன சர்வே எண் தொடர்புடைய சொத்து பட்டா மகேந்திரன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், என்னை வாரிசு என்று காட்டாமல் பட்டா பெற்றுள்ளார். சர்வே எண்.1030/52 என்ற சொத்து மன்னவனூர் கிராமத்தில் இல்லை என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. மகேந்திரனுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக சர்வே எண்.1030/52 என்ற விபரத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.205/1 ல் உள்ள 16 சென்ட் நிலத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, அந்த சொத்தையும் மறைத்து பெயர் மாற்றம் செய்துள்ளார். எனது பண்ட பாத்திரங்கள், நகைககளை வாதி வைத்திருப்பதாகச் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

நான் கோரும் பரிகாரம் இந்த வழக்கில் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனது தாயார் சிதம்பரத்தம்மாள் என்பவர் நான் 6 மாத குழந்தையாக இருக்கும்போதே எனது தந்தை பழனிச்சாமியை விட்டுவிட்டு வேறு ஒரு நபருடன் திருமண உறவு ஏற்பட்டு தனித்து வாழ்ந்து வந்தார் என்றாலும், நானும் அவருடன் தான் வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கும், இந்த சொத்து விபரங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.450/1, சர்வே எண்.224/9, சர்வே எண்.1566/33, சர்வே எண்.1039/52 ஆகிய சர்வே எண்களில்

உள்ள வீடும், நிலமும் மகேந்திரனுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல , எனக்கும் பாத்தியம் உள்ளது . எனது நிரூபண வாக்குமூலத்திலும், எதிர் வழக்குரையிலும் மேற்சொன்ன சர்வே எண்கள் குறித்து எந்தவிதமான விபரமும் , கருத்துகளும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்களுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

எனக்கு கொடைக்கானல் வட்டாச்சியர் வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றால் சரிதான் . அந்த வாரிசு சான்றிதழில் மகேந்திரன், வேலம்மாள், சிதம்பரத்தம்மாள், 3 ம் பிரதிவாதியான நான் (சுசிலா), 4 ம் பிரதிவாதியான கிருஷ்ணவேனி ஆகியோர்களது பெயர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . எனக்கு 4 ல் 1 பாகம் தான் கிடைக்கும் என்றால் சரியல்ல . எனக்கு திருமணத்தின்போது எனது தந்தை பழனிச்சாமி எந்தவிதமான நகையோ , சீர்வரிசையோ கொடுக்கவில்லை என்றாலும் , வாதி மகேந்திரன் தான் நகையும் , சீர்வரிசையும் கொடுத்தார் என்றால் சரியல்ல , எனது திருமணத்தின்போது மகேந்திரனுக்கு வயது 3 ஆகும், எனது அப்பா தான் எனக்கு சீர்வரிசை செய்தார் . எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள விபரங்கள் உண்மையல்ல என்றால் சரியல்ல . நான் இந்த வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 4 ல் 1 பாகம் தான் கிடைக்கப்பெறும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.15 16:51:48 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.